**பாணந்துறை நகர சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 19 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாணந்துறை நகர சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் 2013 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 3/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல. 03 இற்கு முரணாக முன்னைய ஆண்டுகளுக்கு உரித்தான கணக்கு மீதிகளைச் சீராக்குவதற்காக ரூபா 12,746,820 தொகையான தேறிய பெறுமதி திரண்ட நிதியத்திற்குச் சீராக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீதவரிப் பதிவேட்டின் படி, மீளாய்வாண்டின் பிரிவு இல. 2 மற்றும் 5 இல் வீதவரிக்காக பட்டியலிடப்பட்டிருந்த வருமானத்தொகை ரூபா 16,204,400 தொகையான போதிலும் கணக்குகள் தயாரிக்கப்படுகையில் அவ் இரு பிரிவுகளிலும் பட்டியலிடப்பட்ட தொகை ரூபா 11,167,710 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் வீதவரி வருமானமும் நிலுவையாகக் காணப்பட்ட வீதவரிக் கணக்கு மீதியும் ரூபா 5,036,690 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த மற்றும் மேலும் செலுத்தப்பட வேண்டியதாகக் காணப்பட்ட சபை வேலைகளுக்காக ரூபா 595,428 தொகையும்

மகநெகும செயற்திட்டத்திற்காக ரூபா 29,848,504 கடன்கொடுத்தோருக்கான ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் வேலைக் கடன்பட்டோர் மீதி கணக்கீடு செய்யப்படுகையில் ரூபா 1,153,998 தொகை இரு தடவைகள் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 1,500,000 இற்குப் பதிலாக ரூபா 1,300,000 தொகையும் ரூபா 279,683 இற்குப் பதிலாக ரூபா 219,583 தொகையும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் மூலதன மானியம் மற்றும் வேலைக் கடன்பட்டோர் மீதி ரூபா 893,898 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 4,308,010 கூட்டுத்தொகையான வருமானப் பதிவளிப்பு மற்றும் ரூபா 44,899 தொகையான ஊழியர் கடன் மீதிப் பதிவளிப்பு நாட்குறிப்புப் பதிவின் மூலம் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் குறுக்குப் பதிவின் மூலம் பெறுவனவாகக் காண்பிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. நிலுவை வருமான மீதி அறிக்கையில் அவ் வருமானப் பதிவளிப்பு ஆண்டிற்கான பெறுவனவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 28,838,900 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 49,804,754 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 36,817,618 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 40,689 | 29,444 | 22,627 |
| (ii) | வாடகை | 3,076 | 2,796 | 670 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 201 | 197 | 5 |

### 2.2.2 வீதவரி

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 24,389,318 தொகையான நிலுவை வீதவரி மீதியில் ரூபா 13,116,953 இற்கு அதாவது 54 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் மொத்த நிலுவை ரூபா 22,368,701 ஆகக் காணப்பட்டது. இதன் படி, மீளாய்வாண்டின் மொத்த வீதவரி அறவீட்டின் சதவீதம் 63 ஆகக் காணப்பட்டது.

### 2.2.3 வேலை மற்றும் வியாபார வரி

மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டிய வேலை மற்றும் வியாபார வரி மீதி ரூபா 184,340 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 45 நிறுவகங்களிடமிருந்து ரூபா 82,150 தொகை மீளாய்வாண்டிற்கு உரித்தானதாகவும் , 66 நிறுவகங்களிடமிருந்து ரூபா 102,190 1 முதல் 5 ஆண்டுகள் வரையான காலத்திற்கு உரித்தானவையாகவும் நிலுவையாகக் காணப்பட்டன.

### 2.2.4 வியாபார நிலைய வாடகை

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார நிலைய வாடகையின் நிலுவை ரூபா 661,290 தொகையாகக் காணப்பட்டதுடன் இதில் நகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிக்குரிய 124 வியாபார நிலையங்களில் இருந்து 01 முதல் 12 மாதங்கள் வரையான காலப்பகுதிக்காக ரூபா 481,540 தொகையும் 23 வியாபார நிலையங்களில் இருந்து 12 முதல் 24 மாதங்கள் வரையான காலப்பகுதிக்காக ரூபா 179,750 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.5 காணி விற்பனையின் மூலம் அறவிடப்படும் 1 சதவீத வரி

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (225 அதிகாரம்) 165 (இ) (1) ஆம் பிரிவின் பிரகாரம் நகர சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள காணி விற்பனை செய்யப்படுகையில் அக் காணி விற்பனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பணத்தொகையில் 1 சதவீதத்திற்குச் சமனான வரி நகர சபையால் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டு முதல் 08 காணி விற்பனைகளின் போது 1 சதவீத வரித் தொகையாக ரூபா 31,463,408 அறவிடப்பட்டிருந்த போதிலும் அத் தொகை மதிப்பிடப்பட்ட தொகையின் 1 சதவீதமாகக் காணப்பட்டதுடன் எச்சந்தர்ப்பத்திலும் விற்பனைப் பெறுமதியின் 1 சதவீதம் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 செயற்பாட்டு மீளாய்வு**

**2.3.1 முகாமைத்துவத் திறமையீனங்கள்**

**(அ) முற்பணக் கொடுப்பனவுகள்**

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 371(அ) இன் பிரகாரம் ஏதேனுமோர் செயற்பாட்டிற்காக வழங்கப்பட்ட முற்பணத் தொகை அச் செயற்பாடு நிறைவேற்றப்பட்டதை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 1990 ஆம் ஆண்டு முதல் 2013 திசெம்பர் 18 ஆம் திகதி வரை செலுத்தப்பட்டிருந்த முற்பணத் தொகையில் ரூபா 1,129,666 தொகை 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) காலாவதியான வைப்புக்கள்**

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் 3 ஆண்டுகள் காலாவதியான ரூபா 6,751,299 தொகையான வைப்புக்கள் வருமானத்திற்கு எடுக்கப்படுவதற்கோ அல்லது தீர்க்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) கழிவகற்றல்**

2010 ஆம் ஆண்டின் போது திண்மக் கழிவு முகாமைத்துவ அதிகாரசபை மற்றும் சபை நிதியத்திலிருந்து ரூபா 774,593 செலவிடப்பட்டு உயிர் வாயுப் பிரிவொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிராததுடன் சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் சேரும் குப்பைகளை அகற்றுவதற்காக முறையான நடைமுறை சபையால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2013 சனவரி முதல் திசெம்பர் வரை மொறட்டுவை மாநகர சபைக்கு ரூபா 5,166,642 தொகையும் குப்பைகளைக் கொண்டு செல்வதற்காக தனியார் நிறுவகங்களுக்கு ரூபா 240,080 தொகையும் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) சிக்கனமற்ற செலவினங்கள்**

அதிகாரமற்ற நிர்மாணிப்புகள் தொடர்பாக சபையால் தொடரப்பட்ட வழக்குகளுக்காக ரூபா 9,000 தொகை சட்டத்தரணிகளின் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் வழக்கு 2013 நவம்பர் 07 ஆம் திகதி கேட்டு விலகப்பட்டிருந்தது. குற்றச்சாட்டு செயலாளரின் கையொப்பத்துடனும் பெயருடனும் சமர்ப்பிக்கப்பட்டு இறுதி கட்டளை தலைவரின் கையொப்பத்தில் அனுப்பியிருந்தமையே இதற்கான காரணமாகும். இதன் படி, செலுத்தப்பட்டிருந்த தொகை சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கலாகியிருந்தது.

(உ) அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

(i) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் கடன் மீதி ரூபா 25,584,364 தொகையானதுடன் இதில் இடமாற்றலாகிச் சென்ற 12 ஊழியர்களிடமிருந்து ரூபா 90,861 தொகையும் ஓய்வுபெற்றுச்

சென்றிருந்த இரு உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 13,638 தொகையும் சேவையை விட்டு விலகிச் சென்றிருந்த 05 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 127,583 தொகையுமாக ரூபா 232,082 தொகையான மீதியில் 01 ஆண்டு முதல் 14 ஆண்டுகள் வரையான காலப்பகுதியின் போது எவ்வித தவணைப்பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) பல வருட காலமாக முன்கொண்டுவரப்படும் ரூபா 534,074 தொகையான இனங்காணப்படாத ஊழியர் கடன் மீதியும் காணப்பட்டது.

**2.3.2 பதவியணி முகாமைத்துவம்**

---

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 250 ஆகக் காணப்பட்டதுடன் இதற்காக நிரந்தர பதவியணியினர் 232 பேரும், அமைய பதவியணியினர் 62 பேரும் காணப்பட்டனர். இதன் படி, பதவியணி மிகை 44 ஆகக் காணப்பட்டது.

சபையின் முக்கிய நிர்வாகப் பதவியான செயலாளர் பதவி 2012 சனவரி 04 ஆம் திகதியிலிருந்தும் நிர்வாக உத்தியோகத்தர் பதவி 2014 சனவரி 01 ஆம் திகதியிலிருந்தும் வெற்றிடமாக நிலவியது.

**2.3.3 ஆதன தடை**

---

2011 திசெம்பர் 31 திகதியில் நிலுவையாகக் காணப்பட்ட வரித் தொகையை அறவிடுவதற்காக வருமான நிர்வாக உத்தியோகத்தர்கள் ஆதன தடை செய்யும் உத்தியோகத்தர்களாகக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் நிலுவை வீதவரி அறவிடப்படுவதற்காக ஆதனத் தடைப் பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் விநியோகித்தல் மற்றும் சபைக்கு பணம் அனுப்பப்படுதல் தொடர்பிலான செயற்பாட்டில் பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(i) நிலுவையான பட்டியல்கள் தயாரிக்கப்படுவதற்காக விடய எழுதுவினைஞர்களுக்கு பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் வழங்கப்படுகையில் அவை தொடர் இலக்க அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 56, 64, 74, 75, 89, 178, 179, 180, 181, 202, 297 ஆம் இலக்க புத்தகங்கள் விநியோகிக்கப்பட்ட திகதி மற்றும் எவருக்கு விநியோகிக்கப்பட்டது என்பது குறித்து குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 யூலை 23 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த 183 ஆம் இலக்க பற்றுச்சீட்டுப் புத்தகம் காணாமற் போயிருந்தமையும் அதில் 18201 முதல் 18247 வரையான பற்றுச்சீட்டுக்கள் எழுதப்பட்டிருந்தமையும் நிலுவைப் பட்டியலின் படி, அப் பற்றுச்சீட்டுக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 230,977 ஆகக் காணப்பட்டமையும் 2013 மே 08 ஆம் திகதிய சபை முகாமைத்துவ உதவியாளர் (வீதவரி) யின் கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் தினமாகிய 2014 யூன் 06 ஆம் திகதி வரை இத் தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்